1970 ஜனவரி 24]

முன்னாள் மாவட்டக்கழக உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர்கள்

* 71 வின—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடை அளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முழுத் தகுதி பெற்ற தமிழாசிரியருள் பெரும்பான்மையோர் முதனிலைத் தகுதி கொடுக்கப் பெருமலிருப் பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

புலவர் பொ. பொன்னம்பலம்: பாட நேரங்களை, அதாவது பீரியட்களை அடிப்படையாகக் கொண்டு முதல்நிலை அல்லது இரண் டாம் நிலை என்றிருக்கும் பாகுபாட்டை நீக்கி, தகுதி பெற்ற அனைவரையும் முதல்நிலையாக்க அரசு முற்படுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவர்களின் படிப் பின் தகுதி அடிப்படையில்தான் முதல்நிலை, இரண்டாம்நிலை என்று வைக்கப்பட்டிருக்கிறது. முதல்நிலை ஆசிரியர்கள் உயர் நிலைப் பள்ளிகளில் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இரண்டாம் நிலை ஆசிரியர்கள் எட்டாவது வகுப்பு வரையில் உள்ள வகுப்பு களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். திருச்சி மாவட்டத் தைப் பொறுத்தவரையில் 40,000 முதல்நிலை ஆசிரியர்கள் முதல் நிலைக்கான தகுதி பெற்றிருந்தும்கூட முதல்நிலையில் சேர்க்கப் படாததற்குகான காரணம், இடம் காலி ஏற்படுவது இல்லை. இடங் கள் காலியாகும்போது சினியாரிட்டி அடிப்படையில் அவர்கள் முதல் நிலை ஆசிரியர்களாக மாற்றப்படுவார்கள்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: கன்னியாகுமரி மாவட்டத் தில் பல முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்களின் பதவிகள் நிரந்தர மாக்கப்படவில்லை. இப்பிரச்சினை கடந்த ஆறு ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதை உடனடியாகத் தீர்க்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியர்களின் பிரச்னைகள் பரிசீலிக்கப்பட்டு அவ்வப்போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: செகன்டரி கிரேட் படித்து விட்டு ஹையர் கிரேடில் வேலை செய்துவரும் ஆசிரியர்களுக்கு செகன்டரி கிரேட் சம்பளம் தரப்படுவதாகச் சொன்னார்கள். அதேபோல், முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்கள் பதவிகள் காலியாக இல்லை என்பதால் முதல்நிலை ஆசிரியர்கள் தகுதி பெற்றவர்கள்

இரண்டாம் நிலை ஆசிரியர்களாகப் பணி புரிகிறார்கள். ஆகவே மேற்சொன்னதன் அடிப்படையில் இவர்களுக்கும் முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்களின் சம்பளம் தரப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஹையர் கிரேட்களை எல்லாம் செகன்டரி கிரேடாக மாற்றிவரும் முயற்சியின் அடிப் படையில்தான் அங்கு பணி புரியும் செகன்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு செகன்டரி கிரேட் சம்பளம் தரப்படு கிறது. ஆனால் இங்கு இதில் இரண்டாம் நிலையை முதல் நிலையாக மாற்றும் உத்தேசம் இல்லை. இதில் இரண்டாம் நிலைப் பதவிகளும், முதல் நிலைப் பதவிகளும் இருக்கும். பதவி உயர்வு வருகிறபோது முதல் நிலை ஆசிரியர்களுக்கான இடம் காலியாகும்போது அதில் அவர்கள் நியமிக்கப்படும்போது அவர்கள் முதல்நிலை ஆசிரியர் களுக்கான சம்பளத்தைப் பெறுவார்கள்.

திரு. ஆர். கருப்பையா : தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் ஆறு, ஏழு வகுப்பு மாணவர்களுக்குக்கூட தமிழ் ஆசிரியர்களே தமிழ் சொல்லிக்கொடுக்கிறார்கள். ஆனால் அரசாங்க உயர்நிலைப் பள்ளி களில் எட்டாவது வகுப்பிற்கு மேல்தான் தமிழ் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆகவே, ஆறாவது வகுப்பிற்கு வந்தவுடன் தமிழ் ஆசிரியர்கள்தான் தமிழைப் போதிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பல பள்ளிகளில் 6, 7, 8-ம் வகுப்புகளில் தமிழ் ஆசிரியர்களே தமிழ் சொல்லிக் கொடுத்து வருகிறார்கள். சில பள்ளிகளில் அது இல்லாமல் இருக்க லாம். தேவையின் அடிப்படையில் அந்த முயற்சிகளில் ஈடுபட லாம். எட்டாவது வகுப்பு வரையில் இரண்டாம் நிலை ஆசிரியர்கள் பல பள்ளிகளில் இருந்து வருகிறார்கள்.

புலவர் பொ. பொன்னம்பலம் : இருபத்து நான்கு பீரியடுகள் எடுக்கக்கூடிய தமிழ் ஆசிரியர்கள் முதல்நிலை ஆசிரியர்கள் என்றும், அப்படி 24 பீரியடுகள் இல்லை என்றால் அவர்கள் இரண்டாம்நிலை ஆசிரியர்கள் என்றும் பாட நேரங்களை அடிப் படையாக வைத்துப் பகுத்திருக்கிறார்கள். படிப்புத் தகுதியை வைத்துப் பகுக்கவில்லை. ஆகவே அதை மாற்றியமைத்து படிப்புத் தகுதியை வைத்து 24 பீரியடுகள் இல்லாமலிருந்தாலும் ஒரே நிலையாக ஆக்க அரசு முற்படுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படி இல்லை. Degree in the Language plus S.S.L.C., B.T. or B.Ed. இப்படி இருப்பவர்களும், பீ.ஓ.எல். படித்தவர்கள், எஸ்.எஸ்.எல்.சி. முடித் துவிட்டு, எல்.டி., பி.டி., படித்திருந்தால், எஸ்.எஸ்.எல்.சி. படித்து ஓரியன்டல் டைட்டில் அல்லது பண்டிட் பயிற்சி பெற்றிருந்தாலும் இவர்கள் தகுதி அடிப்படையில் முதல் நிலை ஆசிரியர்களாக கருதப் படுகிறார்கள். ஓரியன்டல் டைடில், வித்துவான், புலவர் பரீட்சை படித்துவிட்டு செகன்டரி கிரேட் ட்ரெயினிங் பெற்றவர்கள்

1970 ஜனவரி 24]

எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்காமல் அதற்குக் குறைவாகப் படித்தவர்கள் இரண்டாம் நிலை ஆசிரியர்களாகத் தகுதியைப் பொறுத்த வரையில் கருதப்படுகிறார்கள்.

Underground drainage system in Vellore

* 72Q.—Thiru M. P. SARATHI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the present stage of the scheme for the provision of under ground drainage system in Vellore Municipality?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வேலூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மா. பா. சாரதி : வேலூர் நகராட்சி, சாதாரண சிறு சிறு டிச்சஸ் கட்டுவதற்குக் கூட அனுமதிக்கப்படுவதில்லை. அதை உத்தேசித்து அங்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உடனடியாக, அது பெரிய நகராக இருக்கும் காரணத்தால், எடுத்துக் கொள்ளும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது உத்தேசமில்லை என்று சொன்னேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 12½ கோடி ரூபாய் தான் நீர் வழங்கும் திட்டத்திற்கும், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஏற்கனவே செய்து கொண்டு வருகிற பகுதிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும். புதிதாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும். நான்காவது திட்டக் காலத்தில் குறிப்பிட்ட சில நகரங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அத்திட்டத்தில் வேலூர் நகரம் வரவில்லை. பிறகுதான் அது கவனிக்கப்பட வேண்டும்.

திரு. நா. வீராசாமி : வேலூர் நகரம் வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகராக இருக்கிறது. அங்கு சி.எம்.சி. ஹாஸ்பிட்டல் இருக்கிறது. அகில இந்தியாவிலிருந்தும் அங்கு நோயாளிகள் வருகிறார்கள். அதில்லாமல், மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் போன்ற முக்கியஸ்தர்கள் எல்லாம் அடிக்கடி அங்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நகரத்தில் பாதாளச் சாக்கடை இல்லாமல் அதன் சுகாதாரம் கெட்டுப் போகிறது. ஆகவே அரசு இதைத் தனியாகப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு வழி செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான்காவது திட்டத்தில் திருச்சி, திருநெல்வேலி, கடலூர், காஞ்சிபுரம், சேலம் போன்ற பெரிய நகரங்கள்தான் இருக்கின்றன. நிதி வசதி ஏற்படும்போது வேலூர் கவனிக்கப்படும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு அனுமதி தராவிட்டாலும் அவ்வப்போது பெரிய, பெரிய மேஸனரி டிச்சஸ் கட்டுவதற்கு உடனடியாக அனுமதி வழங்குவதற்கு